1995 நவம்பர் 9]

80—

பன்னாரி அம்மன் கோயிலில் பக்தர்களுக்கு தங்கும் விடுதி கட்டுதல்

24770—திருமதி அ.தி. சரஸ்வதி:

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பன்னாரி அம்மன் கோயிலுக்குப் பக்தர்கள் அதிக வருகை புரிவதால், அதிக அளவில் பயணியர் மாளிகை கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்தத் திருக்கோயிலில் தற்போது 24 தங்கும் அறைகள் உள்ளன. திருக்கோவிலுக்கு வரும் பக்தர்கள் அருள்மிகு மாரியம்மனைத் தரிசனம் செய்து உடனடியாக திரும்ப, பேருந்து வசதி மிகவும் நல்ல முறையில் உள்ளதால் பெரும்பாலோர் இங்கு தங்காமல் சென்று விடுகிறார்கள். ஒரு சிலர் மட்டுமே தங்குவதால் தற்சமயம் உள்ள விடுதிகளே போதுமானதாக உள்ளது. எனவே, தற்போது பயணியர் விடுதிகளைக் கூடுதலாகக் கட்டத் தேவையில்லையென்று அரசு கருதுகிறது.

திருமதி அ.தி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னை சந்தியா தந்த இந்தியத் தாய் சமூகநீதி காத்த வீராங்கனை, நான் நித்தம் பூஜித்து வணங்கும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் அருள்மிகு பன்னாரி அம்மன் கோவில் மிகவும் பிரசித்தி பெற்ற கோவில். வருடந்தோறும் குண்டம் திருவிழா அங்கு சிறப்பாக நடைபெறுகிறது. கிட்டத்தட்ட மூன்று மாவட்ட மக்கள் ஒன்று சேர்ந்து அந்தத் திருவிழாவிற்கு வருகை புரிகின்ற சமயத்தில் பயணியர் மாளிகை இல்லாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். அச்சூழ்நிலையில் நமது அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து பயணியர் மாளிகை கட்ட ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்மிகு பன்னாரி அம்மன்

[1995 நவம்பர் 9

திருக்கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு வசதிகளைப் பெருக்கும்பொருட்டு மேற்படி திருக்கோவிலுக்கு கும்பாபிஷேகம் செய்து 41 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டபடியாலும், இத்திருக்கோவிலுக்குக் கும்பாபிஷேகம் செய்தல், திருமண மண்டபம் கட்டுதல், தங்கும் விடுதி மற்றும் சில பணிகளைச் செய்ய 2.74 கோடி ரூபாய் அளவில் மாஸ்டர் பிளான் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த மாஸ்டர் பிளான்படி 28 குடியிருப்புகள் கட்டப்படவுள்ளன. மேலும் தற்சமயம் உள்ள 12 ஓய்வு அறை கட்டிடத்திற்கும் மேலாக, அதாவது முதல் மாடியில் 12 ஓய்வு அறைகள் கட்ட மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. நிதிநிலைமை, தேவை ஆகியவற்றைப் பொறுத்து இப்பணி மேற்கொள்ளப்படும்.

திருமதி அ.தி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திருக்கோவிலுக்கு ஆண்டுதோறும் அதிக வருமானம் வந்துகொண்டிருக்கிறது. இந்தத் துறையை சிறப்பாக வழிநடத்திச் செல்லும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இத்திருக்கோவிலுக்குக் கும்பாபிஷேகம் செய்ய ஏற்பாடு செய்யப்படும் என்று சொன்னார்கள். மற்றும் சுற்றுச்சுவர் கட்டி, திருமண மண்டபம் எல்லாம் கட்டி முடிக்கப்படும் என்று சொன்னார்கள். அதற்கு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களில் நன்றியைக் கூறி, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைக் கூறி, இந்தப் பணிகள் கிட்டத்தட்ட மூன்று மாத காலங்களில் முடிவடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கூறியதுபோல் கும்பாபிஷேகம் செய்து 41 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. ஆகவே, ஒரு மாஸ்டர் பிளான் போடப்பட்டு, அந்த மாஸ்டர் பிளான்படி, அனைத்துப் பணிகளையும் முடிக்க சுமார் 8 ஆண்டு காலம் ஆகும் என்று கணக்கு எடுக்கப்பட்டுள்ளது. எனவே, மிக முக்கியமாக கருதப்படும் இந்தக் கும்பாபிஷேகம் மட்டும் உடனடியாகக் குறிப்பிட்ட சில திருப்பணிகளைச் செய்து ஆரம்பிக்கலாம் என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது. எனவே, இந்தத் திருப்பணி வேலைகள் மூன்று கட்டமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. முதற்கட்டமாக விமானம் புதுப்பித்தல், பிரகார மண்டபம், அலங்கார வேலைப்பாடுகள் முடிவுற்றவுடன் கும்பாபிஷேகம் செய்யப்படும் என்பதைக் கூறிக் கொள்கிறேன்.